வந்து, அதற்கு ஏதாவது நடவடிக்கை இந்த இலாகாவிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியிருந்தால் அதைப்பற்றி விவரம் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி: இது பற்றிய தகவல் எதுவும் இப்பொழுது இல்லை.

(உ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நில அடைமான வங்கிகள் விவசாயிகளுக்கு கடன் தொகைகள் அளிக்காததும் அரசு எடுத்துள்ள நடவடிக்கையும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள நில அடைமான வங்கிகளில் நிதிப் பற்றுக்குறையின் காரணமாக விவசாயிகளால் கோரப்பட்ட கடன்கள் முறைப்படி அனுமதிக்கப்பட்டும், கடன் தொகை அளிக்கப்படாத நிலையில் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*** மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** தலைவர் அவர்களே, இந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து கடன்கள் வழங்குவதற்கு தமிழ்நாட்டிலிருக்கிற கூட்டுறவு மாநில நிலவள வங்கியிடம் நிதி வசதியின்மை ஒரு போதும் தடையாக இருந்ததில்லை. உண்மையில், கடன் வழங்கத் தன்னிடம் நிதி உபரியாக இருப்பதாகவே அவ்வப்பொழுது அம்மாநில வங்கி அறிவித்துள்ளது. இந்த மாநில வங்கி இந்த வருடம் ஏப்ரல் முதல் ஜூலை வரையில் ரூ. 3 கோடி 70 லட்சம் கடன் வழங்கியுள்ளது. இதில் 17 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நிலவள வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நிதி பற்றுக்குறை காரணமாக நிலவள வங்கி கடன் வழங்குவதை நிறுத்தியுள்ளது என்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வங்கிகள் உட்பட, எந்த வங்கியிடமிருந்தும் எவ்விதமான முறையீடும் கிடைக்கவில்லை. மாருக, மாநில வங்கியிடமுள்ள ரூ. 3.5 கோடி ரொக்க வசதி பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அதோடு ரூ. 4.49 கோடி வரை நிதி வசதியும் இந்த வங்கிக்குக் கிடைக்கும். ஆக மொத்தம் 8 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு கடன் உதவியாக வினியோகம் செய்து கொண்டிருப்பதால், நடைமுறை விதிகளைத் தளர்த்த வேண்டும் என்றும், கிராமப் புறங்களில் நில வள வங்கிகளைப் பெருக்கவும் சிறிய சிறிய விவசாயிகளுக்கு கடன் உதவி கொடுக்கவும், நீர்ப்பாசன கூட்டுறவு சங்கங்கள் அமைக்கவும் அரசினர் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள்.

திரு. ஏ. அ. சுப்பையா: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மாநில நிலவள வங்கியிடம் பணம் செலவழிக்க முடியாத நிலை என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையில், டி.டி.ஸி.-யில் கூட இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது, அவர்களுக்கு ரிசர்வ் பாங்கியிலிருந்து பணம் வரவில்லை என்று தான் நிலைமைகள் இருக்கின்றன. இப்பொழுது கொடுத்த தகவல்படி ஒரு வருஷம் குறைந்ததால் இப்பொழுது அதிகப்பட்டிருக்கிறது என்பதற்கு மகிழ்ச்சி.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அதைச் சொல்ல வேண்டிய இடம் டி.டி.சி. இல்லை. நில வள வங்கிக் கமிட்டி, கலெக்டர் தலைமையில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. மாதம் ஒரு முறை கூட்டம் நடக்கிறது. குறைகள் இருந் தால், அந்தக் கூட்டத்தில் சொல்ல வேண்டும்.

6. அமைச்சரின் விளக்க உரை

கோவை நகராட்சி ஆணையர் நடத்திய ஏலங்களில் ஏற்பட்டுள்ள வருமானக் குறைவுப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டது குறித்து உள்ளாட்சி அமைச்சரின் விளக்கம்.

*** மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகராட்சி ஆணையர் நடத்திய ஏலங்களில் வருமானம் குறைவு ஏற்பட்டதாக டாக்டர் ஹாண்டே அவர்கள் சில குற்றச்சாட்டுக்களைக் கூறினார்கள். அந்தக் குற்றச்சாட்டுக்களில் முக்கியமானவை எட்டு இனங் களைப் பற்றியனவாம். 1970-ல் இந்த எட்டு இனங்களிலும் கிடைத்த ஏலத் தொகை, இதே இனங்களில் சென்ற ஆண்டு கிடைத்த தொகை, கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த இனங்களில் கிடைத்த சராசரி வருமானம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஏலம் விடப்பட்ட இனங்களின் விவரம்.	1970-ல் கிடைத்த ஏலத் தொகை.	சென்ற ஆண்டைய ஏலத் தொகை	கடந்த 5 ஆண்டு களில் சராசரி வருமானம்.
(1)	(2)	(3)	(4)
1. தியாகி குமரன் மார்கெட்	83,560	1,32,000	83,225
2. தியாகி குமரன் மார்கெட் வண்டிப்பேட்டை.	84,100	1,32,000	80,485
3. பன்னீர்செல்வம் மார் கெட்.	66,010	74,999	59,302
4, மௌலானா முகமதலி மார்கெட்,	78,100	46,036	56,387
5. உக்கடம் லாரிப்பேட்டை	80,025	1,13,000	76,585
6. உக்கடம் ஆடு அறுவை மனை.	33,999	29,102	33,935
7. தியாகி குமரன் மார்கெட் மிதிவண்டி நிலையம்.	10,099	11,901	11,065
8. கழிவு நீர்ப் பண்ணை	2,03,025	4,12,352	2,55,308
கூடுதல் ..	6,38,858	9,54,390	6,56,575

இவற்றிலிருந்து சென்ற ஆண்டில் கிடைத்த வருமானத்தை விட இவ் வாண்டில் ரூ. 3.15 இலட்சம் குறைந்திருப்பது தெரிகிறது. கடந்த 5 ஆண்டு களின் சராசரி வருமானத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த வேறுபாடு சற்றேறக்குறைய 18,000 ரூபாய்கள் தான்,